**கொழும்புப் பல்கலைக்கழகம்**

**கல்விப் பீடம்**

**கல்விமாணி (பகுதி III) முதலாம் பருவப் பரீட்சை - 2020**

**SPM 406 - 2 விசேட கற்பித்தல் முறைகள்**

**நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

- நீங்கள் கற்ற இரண்டு பாடங்களைத் தெரிவு செய்க.
- ஒவ்வொரு பாடத்திலுமுள்ள முதலாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்குமாக எல்லாமாக ஆறு (06) வினாக்களுக்கு விடை தருக.
- விடைத்தாள்களை வேறுவேறாகக் கட்டி மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
- விடைத்தாளின் வலதுபக்க மேல்மூலையில் பாடத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுக.

---

## தமிழ்மொழி கற்பித்தல் முறைகள்

01.

i. செவிமடுத்தலின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக.

ii. உந்தியிலிருந்து வெளிப்படும் காற்றினை வெவ்வேறுவிதமாக ஒலிப்பதற்கு உதவுகின்ற உடலுறுப்புக்கள் நான்கினைப் பெயரிடுக.

iii. வாசித்தல் முன் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுக.

iv. செய்யுள் இலக்கியம் கற்பிக்கும்போது பாட அறிமுகத்தை மேற்கொள்ளக்கூடிய நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

v. பிள்ளையின் மொழிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

02.

i. வாசித்தலின் வகைகளைக் குறிப்பிட்டு அவை மாணவர்களுக்கு எந்தவகையில் முக்கியமானவை என்பதை விளக்குக. (07 புள்ளிகள்)

ii. இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசித்தல் திறனை மேம்படுத்த வகுப்பறையில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் பற்றி கருத்துரைக்குக. (08 புள்ளிகள்)

03.

i. மொழியின் பண்புகளை விளக்குக. (07 புள்ளிகள்)

ii. மொழிகற்பித்தலின் பொது நோக்கங்கள், சிறப்பு நோக்கங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகள் மூலம் வேறுபடுத்துக. (08 புள்ளிகள்)

04.

i. இலக்கணம் கற்பித்தலில் விதிவருமுறை, விதிவிளக்கு முறை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகள் மூலம் வேறுபடுத்துக. (07 புள்ளிகள்)

ii. இலக்கணம் கற்பிக்கும் இன்றைய ஆசிரியர் எதிர்கொள்ளும் சவால்களை விளக்குக. (08 புள்ளிகள்)

05.

i. செய்யுள் வாசித்தலின் வகைகளை எடுத்துக்காட்டுக்களோடு குறிப்பிடுக. (07 புள்ளிகள்)

ii. செய்யுளை நயத்தல் தொடர்பாக கற்பிக்கும் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களைக் குறிப்பிட்டு வகுப்பறையில் அவை தொடர்பாக ஆசிரியர் எதிர்கொள்ளும் சவால்களை விளக்குக. (08 புள்ளிகள்)

**கொழும்புப் பல்கலைக்கழகம்**

**கல்விப் பீடம்**

**கல்விமாணி (பகுதி III) முதலாம் பருவப் பரீட்சை - 2020**

**SPM 406 - 2 விசேட கற்பித்தல் முறைகள்**

**நேரம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

- நீங்கள் கற்ற இரண்டு பாடங்களைத் தெரிவு செய்க.
- ஒவ்வொரு பாடத்திலுமுள்ள முதலாம் வினாவுக்கும் ஏனைய இரண்டு வினாக்களுக்குமாக எல்லாமாக ஆறு (06) வினாக்களுக்கு விடை தருக.
- விடைத்தாள்களை வேறுவேறாகக் கட்டி மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.
- விடைத்தாளின் வலதுபக்க மேல்மூலையில் பாடத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுக.

---

## தமிழ்மொழி கற்பித்தல் முறைகள்

01.

i. செவிமடுத்தலின் நான்கு வகைகளையும் குறிப்பிடுக.

ii. உந்தியிலிருந்து வெளிப்படும் காற்றினை வெவ்வேறுவிதமாக ஒலிப்பதற்கு உதவுகின்ற உடலுறுப்புக்கள் நான்கினைப் பெயரிடுக.

iii. வாசித்தல் முன் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடுக.

iv. செய்யுள் இலக்கியம் கற்பிக்கும்போது பாட அறிமுகத்தை மேற்கொள்ளக்கூடிய நான்கு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

v. பிள்ளையின் மொழிவிருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் சமூகக் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

02.

i. வாசித்தலின் வகைகளைக் குறிப்பிட்டு அவை மாணவர்களுக்கு எந்தவகையில் முக்கியமானவை என்பதை விளக்குக. (07 புள்ளிகள்)

ii. இடைநிலை வகுப்பு மாணவர்களின் வாசித்தல் திறனை மேம்படுத்த வகுப்பறையில் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் பற்றி கருத்துரைக்குக. (08 புள்ளிகள்)

03.

i. மொழியின் பண்புகளை விளக்குக. (07 புள்ளிகள்)

ii. மொழிகற்பித்தலின் பொது நோக்கங்கள், சிறப்பு நோக்கங்கள் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகள் மூலம் வேறுபடுத்துக. (08 புள்ளிகள்)

04.

i. இலக்கணம் கற்பித்தலில் விதிவருமுறை, விதிவிளக்கு முறை ஆகியவற்றை எடுத்துக்காட்டுகள் மூலம் வேறுபடுத்துக. (07 புள்ளிகள்)

ii. இலக்கணம் கற்பிக்கும் இன்றைய ஆசிரியர் எதிர்கொள்ளும் சவால்களை விளக்குக. (08 புள்ளிகள்)

05.

i. செய்யுள் வாசித்தலின் வகைகளை எடுத்துக்காட்டுக்களோடு குறிப்பிடுக. (07 புள்ளிகள்)

ii. செய்யுளை நயத்தல் தொடர்பாக கற்பிக்கும் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டிய விடயங்களைக் குறிப்பிட்டு வகுப்பறையில் அவை தொடர்பாக ஆசிரியர் எதிர்கொள்ளும் சவால்களை விளக்குக. (08 புள்ளிகள்)

## புவியியல் கற்பித்தல் முறைகள்

01.

i. புவியியல் என்பதனைச் சுருக்கமாக வரையறை செய்க.

ii. புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியரிடம் காணப்பட வேண்டிய விசேடமான பண்புகள் 5 எழுதுக.

iii. இலங்கையில் இடைநிலை வகுப்புக்களில் புவியியல் பாடம் கற்பித்தலின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

iv. புவியியல் பாடம் கற்கும் மாணவர்களுக்கு சமவுயரக் கோடுகளைக் கற்பிப்பதற்குப் பொருத்தமான கற்பித்தல் சாதனங்களை முன்வைக்குக.

v. புவியியல் பாடம் கற்பிப்பித்தலில் புவியியல் ஆய்வுகூடத்தின் பயன்பாடுகள் 04 ஐக் குறிப்பிடுக.

(4 x 5 = 20 புள்ளிகள்)

02.

i. வரலாற்று ரீதியாகப் புவியியலானது ஒரு பாடமாக எவ்வாறு வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றது என்பதனை விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. புவியியல் பாடத்தைக் கற்பதனால் மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் விசேட திறன்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(08 புள்ளிகள்)

03.

i. புவியல் பாட விடயமொன்றைக் கற்பிப்பதற்குப் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைக் குறிப்பிட்டு அதனை உரிய படிமுறைகளுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. நீங்கள் மேலே குறிப்பிட்ட கற்பித்தல் முறையினுடைய பலம் மற்றும் பலவீனங்களை எடுத்துக்காட்டுக.

(05 புள்ளிகள்)

04.

i. புவியியல் பாடம் கற்பித்தலில் புவியியல் அறையொன்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. புவியியல் அறையொன்றை அமைப்பதற்குப் பொருத்தமான மாதிரி அமைப்பு ஒன்றைக் முன்வைத்து விளக்குக.

(08 புள்ளிகள்)

05. புவியியல் பாடத்தைக் கற்பிப்பதற்கான கற்பித்தல் துணைச் சாதனங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து மூன்றைத் தெரிவு செய்து அவற்றின் பலம் மற்றும் பலவீனங்களை விளக்குக.

i. வெண்பலகை

ii. பூகோள மாதிரி

iii. காணொளி (Videos)

iv. வரைபடங்கள் (Maps)

v. இதவடிவங்கள் (Modules)

(5 x 3 = 15 புள்ளிகள்)

## வரலாறு கற்பித்தல் முறைகள்

01.

i. இரு வரைவிலக்கணங்கள் தந்து வரலாறு என்றால் என்ன? என்பதனை விளக்குக.

ii. வரலாற்றைக் கற்பதன் குறிக்கோள்களை கடந்தகால மற்றும் தற்கால அடிப்படையில் வேறுபடுத்தி விளக்குக.

iii. வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதற்குப் பொருத்தமான வெவ்வேறுபட்ட முறைகளை விபரிக்குக.

iv. வரலாற்றுப் பாடத்தைக் கற்பதற்கு வரலாற்று அறை எவ்வாறு உதவும் என்பதற்கான நான்கு நியாயங்களை முன்வைக்குக.

v. வரலாற்று ஆசிரியர் ஒருவர் விருத்தி செய்ய வேண்டிய பண்புகள் நான்கைக் குறிப்பிடுக.

(4 x 5 = 20 புள்ளிகள்)

02.

i. வரலாற்றினுடைய இயல்பானது உண்மையான மூலாதாரங்களைத் தேடிச் செல்வதாகும். இக் கூற்றை விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. வரலாறு ஒரு விஞ்ஞான ரீதியான பாடமா? அல்லது அது ஒரு கலைப் பாடமா? என்பதனை நியாயப்படுத்துவதற்குரிய காரணங்களை குறிப்பிட்டு விளக்குக.

(8 புள்ளிகள்)

03.

i. வரலாற்றுப் பாடமானது தனித்துவமான பாரம்பரியங்களையும் கலாசார அடையாளங்களையும் எவ்வாறு பேணிப் பாதுகாக்கின்றது என்பதனை விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. அறிவு மற்றும் கற்பனா சக்தியை வளர்ப்பதில் வரலாற்றுப் பாடம் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது என்பதனை விளக்குக.

(8 புள்ளிகள்)

04.

i. வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஏற்றவகையில் அதன் பாடவிடயங்கள் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. கனிஷ்ட இடைநிலை மாணவர்களுக்கு வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதற்குப் பொருத்தமான இரு முறைகளையும் அம் முறைகளை உபயோகித்துக் கற்பிக்கக் கூடிய பாட விடயங்கள் நான்கையும் குறிப்பிட்டு விளக்குக.

(8 புள்ளிகள்)

05.

i. வரலாறு கற்பித்தலில் மாதிரியுருக்களும் வரைபடங்களும் எவ்வாறு உதவுகின்றன என்பதனை அவற்றின் பண்புகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(7 புள்ளிகள்)

ii. வரலாற்று நிகழ்வுகளை அவற்றின் கால ஒழுங்கிற்கு ஏற்ப ஒப்பிட்டுக் கற்பிப்பதற்கு வரலாற்று மூலாதாரங்கள் எவ்வாறு பயன்படுகின்றன என்பதனை விளக்குக.

(8 புள்ளிகள்)

## குடியுரிமைக்கல்வி கற்பித்தல் முறைகள்

01.

i. பாடசாலைக் கலைத்திட்டத்தில் குடியுரிமைக் கல்விப்பாடம் உள்ளடக்கப்பட்டதன் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

ii. குடியுரிமைக்கல்விப் பாடத்தில் பாட ஒன்றிணைப்பு என்ற எண்ணக்கருவைச் சுருக்கமாக விளக்குக.

iii. தற்போதுள்ள குடியுரிமைக்கல்வி பாடத்தின் உள்ளடக்க அமைப்பை சுருக்கமாக விபரிக்குக.

iv. குடியுரிமைக்கல்வி கற்பிக்கும் ஆசிரியர் கொண்டிருக்க வேண்டிய நான்கு பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

v. செயல்சார்ந்த மற்றும் செயலின்மைசார்ந்த குடியுரிமைக் கல்வி (Active and Passive citizenship education) என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

(4 x 5 = 20 புள்ளிகள்)

02.

i. குடியுரிமைக்கல்விப் பாடத்தைக் கற்பிப்பதனால் பெற்றுக் கொள்ளக்கூடிய திறன்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

ii. குடியுரிமைக்கல்விப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை தர்க்க ரீதியாக ஆராய்க.

(07 புள்ளிகள்)

03.

i. குடியுரிமைக்கல்விப் பாடக் கலைத்திட்டத்தை தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய காரணிகள் ஐந்தினை இனை விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. குடியுரிமைக் கல்விப்பாடத்தைக் கற்பிக்கப் பொருத்தமான ஐந்து கற்பித்தல் முறைகளைப் பட்டியலிட்டு அவற்றுள் இரண்டு முறைகளைத் தெரிவு செய்து அதன் பலமான மற்றும் பலவீனமான அம்சங்களைக் கலந்துரையாடுக.

(07 புள்ளிகள்)

04.

i. தரம் 6-11 வரையான தரங்களிலுள்ள குடியுரிமைக்கல்விப் பாடங்களிலிருந்து இருவேறு தரங்களிலிருந்து உமக்கு விருப்பமான இரண்டு அலகுகளைத் தெரிவு செய்து அதன் தரரீதியான பொருத்தப்பாட்டை சுருக்கமாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

ii. மேற்படி இரண்டு பாட அலகுகளைக் கற்பிக்கப் பொருத்தமான இரண்டு கற்பித்தல் நுட்பங்களைத் தெரிவு செய்து மேற்படி அலகுகளைக் கற்பிப்பதற்கு அந்நுட்பங்களின் பொருத்தப்பாட்டை விளக்குக.

(07 புள்ளிகள்)

05.

i. உலகக் குடிமகன் என்ற எண்ணக்கருவை வரையறை செய்க.

(08 புள்ளிகள்)

ii. உலகக் குடிமகன் ஒருவரிடத்தில் காணப்பட வேண்டிய தகுதிகள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

(07 புள்ளிகள்)

********************************